**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம், தை மாதம் 13 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**இடைக்கால மனு எண்.12/2025**

**in**

**அசல் வழக்கு எண். 35/2022**

S.A. பழனிச்சாமி ... **மனுதாரர்/ கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்**

**// எதிர்//**

1. செல்வம்
2. K. கருப்புசாமி
3. சுந்தரம்
4. சபாபதி
5. சௌந்தர்ராஜ்
6. அன்பழகன்
7. முருகன் ... **எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்**

8. பாலாமணி
9. தாயம்மாள்
10. கன்னியம்மாள்
11. சுமதி
12. G. பழனிசாமி (இறப்பு)
13. சார்பதிவாளர் அவர்கள், சூலூர்
14. வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்

கோயம்புத்தூர் தெற்கு

15 . வட்டாட்சியர் அவர்கள், சூலூர்

16. P.செந்தில் ... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.பிரகாஷ், அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.ராதாகிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.D.சித்ரா, அவர்கள் ஆஜராகியும், 16 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.அருணாச்சலம், அவர்கள் ஆஜராகியும், 11, 13 முதல் 15 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் ஒருதலைபட்சமாகியும், 5 ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியும், இந்நீதிமன்றத்தில் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10(2) r/w பிரிவு 151 ன் கீழ் மனுதாரர்/கட்சி சேர்க்கப்பட வேண்டியவரை அசல் வழக்கில் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டும் என மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:</u>**

1.1). சூலூர் தாலுக்கா, அரசூர் கிராமத்தில் உள்ள, குறிப்பிட்ட எல்லைகளுடன் கூடிய 2.27 ஏக்கர் பரப்பளவுள்ள ஜி.எஸ்.எண்.242/1A மற்றும் பட்டா 758-ல் உள்ள ஜி.எஸ்.எண்.242/2A-ல் உள்ள 2.29 ஏக்கர் பரப்பளவுள்ள சொத்துக்கள் மனுதாரரின் தாய்வழித் தாத்தா அருணாசல கவுண்டருக்குச் சொந்தமானவை. அருணாசல கவுண்டருக்கு சுப்பாத்தாள், மருதக்கால் என்ற இரண்டு மகள்களும், முத்துசாமி என்ற ஒரு மகனும் உள்ளனர். 9 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள்/ 2 மற்றும் 3 பிரதிவாதிகள் சுப்பாத்தாளின் மகள்கள் ஆவர். 8 ம் எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி, 9 ம்

எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதியின் மகள் ஆவார்.

1.2). மனுதாரரும், மனுதாரரின் சகோதரர் காலஞ்சென்ற அங்கமுத்துவும், சாந்தாமணி என்பவரும் மேற்படி மருதக்காளின் மகன் மற்றும் மகள் ஆவார்கள். மனுதாரரின் சகோதரர் அங்கமுத்து, தனது மனைவி ஜானகி, மகன்கள் செல்வமுத்துக்குமார் மற்றும் கோபி ஆகியோரை சட்டப்பூர்வ வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். மனுதாரரின் தாய்மாமா முத்துசாமி வாரிசுகள் இல்லாமல் இறந்துவிட்டார். மேற்கூறிய ஜி.எஸ்.எண்.242/1A, 242/2A-ல் உள்ள மூதாதையர் சொத்துக்கள் பல பிரச்சனைகள் காரணமாகப் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை. மேற்கூறிய சொத்தில் மனுதாரருக்கு 21/54 பங்கு உள்ளது. எனவே மனுதாரர் கோயம்புத்தூர் 3 வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பாகபிரிவினை கோரி அசல் வழக்கு எண்.891/2023 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

1.3). 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 7 வாதிகள் ஜி.எஸ். எண் 242/2-ல் உள்ள தங்களுக்குச் சொந்தமான வழக்கு சொத்தைப் உட்பிரிவு செய்தபோது ஒரு தவறு நிகழ்ந்ததாகக் கூறி, ஜி.எஸ். எண் 242/1A, 242/2A, 242/1C, 242/2B மற்றும் 242/2C ஆகிய சொத்துக்களை வழக்கு முடியும் வரை வில்லங்கம் அல்லது அடமானம் வைப்பதற்கோ முழுமையான தடை விதிக்கக் கோரி நிவாரணம் கோரியுள்ளனர்.

1.4). உண்மையில், வருவாய்த் துறை அதிகாரிகள் மனுதாரரிடமிருந்து ஒரு விரிவான விளக்கத்தைப் பெற்றனர். 2 ம் எதிர்மனுதாரர்/ 2 ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அந்த மனு இன்னும் நிலுவையில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில், சூலூர் தாலுக்கா, அரசூர் கிராமத்தின் ஜி.எஸ். 242/1 மற்றும் 242/2-ல் உள்ள சொத்துக்களில் உரிமை, பட்டா, பங்கு மற்றும் நலன் உள்ள அவசியமான தரப்பினரைச் சேர்க்காமல், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 7 வாதிகள் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

1.5). மேலே குறிப்பிட்டபடி, ஜி.எஸ். 242/1 மற்றும் 242/2-ல் உள்ள சொத்துக்களில் மனுதாரருக்கு பங்கு, உரிமை மற்றும் நலன் உள்ளது. இந்தச் சூழ்நிலையில், மேற்கூறிய வழக்கை மேலும் தொடர்வதும், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 7 வாதிகள் கோருவது போல, 242/1 (குறிப்பாக 242/1B) சொத்து தொடர்பாக விளம்புகைத் தீர்ப்பு வழங்கப்பட்டால், மனுதாரருக்கு பாதகத்தை ஏற்படுத்தும். மனுதாரரை பிரதிவாதியாகச் சேர்க்காமல் வழக்கை மேலும் தொடர்வது, பல வழக்குகளுக்கு வழிவகுக்கும். 1 முதல் 7 எதிர் மனுதாரர்கள்/ 1 முதல் 7 வாதிகள் எழுப்பிய பிரச்சினைக்கு மனுதாரரிடம் சரியான தீர்வு உள்ளது. நீதியை நிலைநாட்டும் நோக்கில், மனுதாரர் தரப்பு வாதத்தை முன்வைக்க மனுதாரருக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். எனவே, மேற்கூறிய வழக்கில் மனுதாரரை ஒரு பிரதிவாதியாக கட்சி சேர்க்கக் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரை வழக்கில் பிரதிவாதியாகச் சேர்த்து, மனுதாரர் தரப்பு வாதங்களை முன்வைக்க அனுமதிக்காவிட்டால், மனுதாரருக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்புக்கும் மிகுந்த சிரமத்திற்கும் ஆளாவார். மனு அனுமதிக்கப்பட வேண்டும்.

## 2). 2ம் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையை 1 மற்றும் 3 முதல் 7 எதிர்மனுதாரர்கள் எதிருரையாக ஏற்றுக்கொண்டதன் சுருக்கம் :

2.1). மேற்படி மனுதாரர் / உத்தேச தரப்பினர் தாக்கல் செய்துள்ள மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், பொருண்மைகளின் படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்கள் வெளிப்படையாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் 1வது பாராரவில் அவருடைய தாய்வழி தாத்தா அருணாச்சல கவுண்டருக்கு 2 மகள்களும் 1 மகனும் இருந்ததாகவும், மேற்படி அவருக்கு அரசூர் கிராமம் G.S.No.242/1A ல் 2.29 ஏக்கர் நிலமும் G.S.No.242/2 ல் 2.29 ஏக்கர் நிலமும் இருந்ததாகவும் கூறியுள்ளார். அதாவது மொத்தமாக 4.56 ஏக்கர்

நிலம் மட்டுமே இருந்ததாகவும் கூறியுள்ளார்.

2.2). மேலும் இறந்து போன அருணாச்சல கவண்டரின் இரண்டாவது மகளான மருதக்காளுக்கு மனுதாரர் மற்றும் அங்கமுத்து மற்றும் சாந்தாமணி வாரிசு என்றும் மனுதாரரின் மாமா முத்துச்சாமி கவுண்டருக்கு குழந்தைகள் ஏதுமில்லை என்றும் அவர்களுடைய பிதுராஜ்ஜிய வகை சொத்தான G.S.No. 242/1A, 242/2A ல் எவ்வித பாகப்பிரிவினையும் நடைபெறவில்லை என்றும் மேற்படி சொத்தில் மனுதாரருக்கு 21/54 பாகம் உள்ளதாக கோயமுத்தார் மூன்றாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் அ.வ.எண்.891/2023 என்ற வழக்கு நிலுவையிலுள்ளது என்று கூறியுள்ளார். ஆனால் இந்த வழக்கிற்கும் மனுதாரருடைய பாக சாசன வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்த மேற்படி அ.வ.எண்.891/2023 ல் 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் /வாதிகள் ஒரு தரப்பினராக சேர்த்து சொல்லாமல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அவ்வாறு உள்ள போது இவ்வழக்கில் இம்மனுதாரர் ஒரு தேவையில்லாத தரப்பினராகத்தான் உள்ளார். அவரை சேர்க்காமல் போனால் இவ்வழக்கிற்கு எவ்விதமான இழப்பும் ஏற்பட போவதில்லை.

2.3). மேலும் பாரா எண்.8 ல் மனுதாரருக்கும் S.F.No.242/1, 242/2 ல் பாகம் உள்ளதால் S.F.No.242/1 ல் உள்ள 242/1B ல் 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு அவர்களது பிதுராஜ்ஜித வகையில் வந்த சொத்தாக உள்ளது. மேலும் மேற்படி 241/1 B ல் உள்ள சுமார் 1.65 ஏக்கர் பூமியானது கடந்த 1958 முதல் தற்போது வரை 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தான் அனுபவத்திலும் ஆவணப்படியும் உள்ளார்கள் என்பதை வருவாய்த்துறையின் தற்போதைய விசாரணையில் உறுதி செய்துள்ளார்கள். மேலும் இம்மனுதாரர் I.A.No.11/2025 இதே காரணங்களில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது யாதெனில்? இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.**

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கு விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

5.1). மனுதாரர் தரப்பில் ஜி.எஸ்.எண்.242/1A, 242/2A-ல் உள்ள மூதாதையர் சொத்துக்கள் பல பிரச்சனைகள் காரணமாகப் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை. மேற்கூறிய சொத்தில் மனுதாரருக்கு 21/54 பங்கு உள்ளது. எனவே மனுதாரர் கோயம்புத்தூர் 3 வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக பாகபிரிவினை கோரி அசல் வழக்கு எண்.891/2023 என்ற வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 7 வாதிகள் ஜி.எஸ். எண் 242/2-ல் உள்ள தங்களுக்குச் சொந்தமான வழக்கு சொத்தைப் உட்பிரிவு செய்தபோது ஒரு தவறு நிகழ்ந்ததாகக் கூறி, ஜி.எஸ். எண் 242/1A, 242/2A, 242/1C, 242/2B மற்றும் 242/2C ஆகிய சொத்துக்களை வழக்கு முடியும் வரை அந்நியப்படுத்துவதற்கோ அல்லது அடமானம் வைப்பதற்கோ முழுமையான தடை விதிக்கக் கோரி நிவாரணம் கோரியுள்ளனர். 2 ம் எதிர்மனுதாரர்/ 2 ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட அந்த மனு நிலுவையில் உள்ள நிலையில் சூலூர் தாலுக்கா, அரசூர் கிராமத்தின் ஜி.எஸ். 242/1 மற்றும் 242/2-ல் உள்ள சொத்துக்களில் உரிமை, பட்டா, பங்கு மற்றும் நலன் உள்ள மனுதாரரை அவசியமான தரப்பினைாக

சேர்க்காமல், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 7 வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். எனவே மனுதாரரை ஒரு பிரதிவாதியாக கட்சி சேர்க்கக் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என சொல்லப்பட்டுள்ளது.

5.2). எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் மனுதாரருடைய பிதுராஜ்ஜிய வகை சொத்தான G.S.No.242/1A, 242/2A ல் மனுதாரருக்கு 21/54 பாகம் உள்ளதாக கோயமுத்தார் மூன்றாவது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் பாகபிரிவினை கோரி அ.வ.எண்.891/2023 என்ற வழக்கு நிலுவையிலுள்ளது என்று கூறியுள்ளார். இந்த வழக்கிற்கும் மனுதாரருடைய பாக சாசன வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. மேலும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.891/2023 ல் 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் /வாதிகளை தரப்பினராக சேர்க்காமல் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எனவே இவ்வழக்கில் இம்மனுதாரர் ஒரு தேவையில்லாத தரப்பினராகத்தான் உள்ளார். அவரை சேர்க்காமல் போனால் இவ்வழக்கிற்கு எவ்விதமான இழப்பும் ஏற்பட போவதில்லை. மனுதாரருக்கும் S.F.No.242/1, 242/2 ல் பாகம் உள்ளதால் S.F.No.242/1 ல் உள்ள 242/18 ல் 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு அவர்களது பிதுராஜ்ஜித வகையில் வந்த சொத்தாக உள்ளது. மேலும் மேற்படி 241/1B ல் உள்ள சுமார் 1.65 ஏக்கர் பூமியானது கடந்த 1958 முதல் தற்போது வரை 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தான் அனுபவத்திலும் ஆவணப்படியும் உள்ளார்கள் என்பதை வருவாய்த்துறையின் தற்போதைய விசாரணையில் உறுதி செய்துள்ளார்கள் என ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

5.3). உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் **கட்டளை 1 விதி 10-ன் கீழ் பொருத்தமான தரப்பினரைச் சேர்த்தல்:**

*"நீதிமன்றம், தன் சொந்த விருப்பத்தின் பேரிலோ, அல்லது ஏதாவது ஒரு தரப்பினரின் விண்ணப்பத்தின் பேரிலோ,*

*தேவையான நபரை பிரதிவாதியாகவோ அல்லது வாதியாகவோ சேர்க்கலாம்".*

5.4). மனுதாரர் தரப்பில், சூலூர் தாலுக்கா, அரசூர் கிராமத்தின் ஜி.எஸ். 242/1 மற்றும் 242/2-ல் உள்ள சொத்துக்களில் உரிமை, பட்டா, பங்கு மற்றும் நலன் உள்ள அவசியமான தரப்பினரைச் சேர்க்காமல், 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 7 வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர். மேலே குறிப்பிட்டபடி, ஜி.எஸ். 242/1 மற்றும் 242/2-ல் உள்ள சொத்துக்களில் மனுதாரருக்கு பங்கு, உரிமை மற்றும் நலன் உள்ளது. 1 முதல் 7 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 7 வாதிகள் கோருவது போல, 242/1 (குறிப்பாக 242/1B) சொத்து தொடர்பாக விளம்புகைத் தீர்ப்பு வழங்கப்பட்டால், மனுதாரருக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என சொல்லப்பட்டுள்ளது. எனவே, மனுதாரருக்கு வழக்கு சொத்தில் பங்கு, உரிமை உள்ளா? என்பது குறித்தும், மனுதாரர் அசல் வழக்கில் அவசியத் தரப்பினரா? என்பது குறித்தும் மனுதாரரை அசல் வழக்கில் சேர்த்தால் தான் தீர்வு காண இயலும்.

5.5). மேற்படி பரிசீலனைகளில் இருந்து மனுதாரருக்கு சூலூர் தாலுக்கா, அரசூர் கிராமத்தின் ஜி.எஸ். 242/1 மற்றும் 242/2-ல் உள்ள சொத்துக்களில் உரிமை, பட்டா, பங்கு உள்ளாதாக சொல்லியுள்ளது மற்றும் ஜி.எஸ்.எண்.242/1A, 242/2A-ல் உள்ள சொத்தில் மனுதாரருக்கு 21/54 பங்கு உள்ளதாக சொல்லிள்ள சங்கதிகள் மற்றும் எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் மேற்படி 241/1B ல் உள்ள சுமார் 1.65 ஏக்கர் பூமியானது கடந்த 1958 முதல் தற்போது வரை 1 முதல் 7 வரையிலான எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தான் அனுபவத்திலும் ஆவணப்படியும் உள்ளார்கள் என சொல்லியுள்ள சங்கதிகள் பொறுத்து அசல் வழக்கு இறுதியில் விசாரணை மற்றும் ஆவணங்கள் மூலம்தான் தீர்வு காணமுடியும். முடிவாக நீதியின் நலன் கருதியும், பின்னிட்டு இது சம்மந்தமாக வழக்கு ஏற்படாமல் இருக்க வேண்டும் என்பது கருதியும் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 27ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சூலூர்.**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :-** இல்லை

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சூலூர்.**

Draft/ Fair Order
I.A.No.12/2025
O.S.No.35/2022
Dated:27.01.2026
DMC, Sulur